மக்கம்பனி, எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 25 வியாழக்கிழமை (12-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 322

Machine / Editorial Staff / Date-Time

# படையின் அராஜகத்துக்கு எதிராக சர்வதேச எதிர்ப்பு வலுக்கின்றது!

## யுத்தத்தை நிறுத்தும் அளவுக்கு தீவிரமாகும்

கொழும்பு, ஒக்ரோபர் 12

ஸ்ரீலங்கா அரசுப் படைகள் யுத்த நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொண்டு வரும் மனிதப் படுகொலைகள் மற்றும் அராஜக நடவடிக்கைகள் காரணமாக ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் எதிர்ப்பு வலுத்து வருகின்றது. அரசை வற்புறுத்தி யுத்தத்தை நிறுத்தச் செய்யும் அளவுக்கு இந்த எதிர்ப்பும் அழுத்தமும் அடுத்த சில வாரங்களுக்குள் தீவிரமாகும்.

சிங்கள வார இதழான "ஹிரு" இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது

அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தத்திற்கு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மீன் பிடித்தால் கடும் தண்டனை

திருகோணமலை, ஒக். 12

திருகோணமலை மாவட்டத்தில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் சந்தசிரி எச்சரித்துள்ளார்.

திருகோணமலையில் பகலிலும் இரவிலும் கடற்பிராந்தியத்தில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் பகலிலும் இரவிலும் தொழிலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் அறிக்கை விமானத்திலிருந்து வீச்சு!

### நேற்றிரவு யாழ் நகரில் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 12

ஜனாதிபதி சந்திரிகாவினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் தமிழ்ப் பிரதிகள் நேற்று இரவு விமானம் மூலம் யாழ்ப்பாணத்தின் மீது வீசப்பட்டன.

இரவு 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் யாழ்ப்பாணப் பகுதி மீது உயரத்தில் பறந்தவாறு வட்டமிட்ட விமானத்திலிருந்தே இந்த அறிக்கையின் பிரதிகள் வீசப்பட்டன.

இன்றைய 'உதயன்' பத்திரிகையை விட சற்று அளவில் சிறியதாக — நான்கு பக்கங்களில் — 'ஒவ்செட்' முறையில் இந்த அறிக்கை அச்சிடப்பட்டிருந்தது. முன் பக்கத்தில் சந்திரிகாவின் கலர்படம் இடம் பெற்றிருந்தது. அறிக்கையின் முடிவில் சந்திரிகாவின் ஒப்பம் காணப்பட்டது.

'நேர்மையுடனும் அர்ப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் கடிதம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு!

### யாழ். நிலைமையை விளக்கி

கொழும்பு, ஒக். 12

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான உணவு நெருக்கடியை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் அவசர கோரிக்கை ஒன்றை யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேற்று விடுத்துள்ளார்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள அரச அதிபர் ஜனாதிபதிக்கு அனுப்பிய

(7 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டா சமாதிக்கு அருகில் ஒருவர் சுட்டுக் கொலை

### இன்ஸ்பெக்டர் விளக்க மறியலில்

கொழும்பு, ஒக். 12

ஹொரகொல்லவில் உள்ள எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கு அருகில் பொலீஸார் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜஸ்மின் ராஜபக்ஸ என்னும் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சப். இன்ஸ்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பே முன்னேற்றம் தடைப்படக் காரணம்

கொழும்பு, ஒக். 12

வலிகாமம் கிழக்கில் இடிமுழக்கத் தாக்குதல் ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் முன்னேற்ற நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பே இதற்குக் காரணம் ஆகும்.

''ஐலண்ட்'' ஆங்கில வார இதழின் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி பலாலி ராணுவத் தளம் அமைந்துள்ள பகுதியில் வசாவிளான் பக்கத்தில் இருந்து படையினரின் மூன்று பிரிவுகள் அச்சுவேலி மீது தொடர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேறினர். இப்படைப் பிரிவுகளில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் இருந்தனர்.

முன்னைய ராணுவ நடவடிக்கைகளின் போது நடந்து கொண்டது போன்று நடந்து கொள்ளாமல் முன்னேறிய படையினருடன் புலிகள் கடுமையாக மோதினர் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரப்பகுதி மீதான தாக்குதலுக்கு முன் பலாலியின் பாதுகாப்பு முக்கியம்

### படையினர் கருதுகிறார்களாம்

கொழும்பு ஒக். 12

யாழ். நகரப் பகுதியில் உள்ள புலிகள் மீது தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பலாலி விமானத் தளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது முக்கியமானது ஆகும்.

மேற்கண்டவாறு படையினர் தெரிவிப்பதாக ஐலண்ட் வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மாத முற்பகுதியில் வலிகாமம் கிழக்கில் படையினர் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கையின்போது பலாலி விமானத் தளத்துக்கு தென் கிழக்கேயும் கிழக்கேயும் ஏறத்தாழ 25 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருப்பதாகவும்—

பலாலி விமானத்தளத்தை விடுதலைப் புலிகளின் மோட்டர் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க இது போதுமானது என்று படையினர் கருதுகின்றனர் என்றும் ஐலண்ட் நாளிதழ் மேலும் தெரிவிக்கிறது.

இந்த மாத முற்பகுதியில் வலிகாமம் கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசத்தில் இருந்தே விடுத

(7 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் புதிய அரண்களை ஊடுருவி தாக்க புலிகள் மீண்டும் தயாராகின்றனராம்

மாத முற்பகுதியில் வலிகாமம் கிழக்கில் படையினர் மேற்கொண்ட இடிமுழக்க ராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பகுதிகளில் புலிகளின் எந்த ஒரு தாக்குதலையும் முறியடிக்கத் தயாராக படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி த ஐலண்ட் வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

படையினரால் நிறுவப்பட்ட [illegible] ஊடறுத்த நடந்த வாரம் புலிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து மற்றொரு தாக்குதலுக்குத் தயார்ப்படுத்து[illegible] புலிகளின் தலைமைப் பீடம் உத்தரவிட்டிருப்பதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணத்திலும் மற்றும் பகுதிகளிலும் படையினர் மீது புலிகள் விட்டு விட்டு நடத்தும் தாக்குதல்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் மா வந்தவுடன் பாண் விலை அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 12

திருகோணமலையில் இருந்து ''ஹபரண'' கப்பல் மூலம் மா எடுத்துவரப்படும் பட்சத்தில், அந்த மாவைக் கொண்டு தயாரிக்கப்படும் பாண் கூடுதல் விலைக்கே விற்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் இக்கப்பலில் மா ஏற்றும் வேலைகள் நாளை ஆரம்பிக்கும் என்றும் — கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் எப்போது வரும் என்ற சரியான தகவல் நேற்று மாலைவரை யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை.

மாவின் விலையை அரசு உயர்த்தியுள்ளதால் —

அந்த விலையேற்றத்துக்கு ஏற்ப பாணின் விலை அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெற்றிடம் நிரப்பும் பட்டியல்

உயிரியல் விஞ்ஞான கற்கை நெறி,

விவசாய விஞ்ஞான கற்கை நெறி

1994/95

1994/95 ஆம் ஆண்டிற்கான வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் உயிரியல் விஞ்ஞான கற்கை நெறி, விவசாய விஞ்ஞான கற்கை நெறி ஆகியவற்றிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் 27-10-1995 க்கு முன்னதாக தம்மைப் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் உள்ள பட்டியலில் தமது பெயர் உள்ளதா எனப் பார்த்தறியலாம்

பதிவாளர்.

[சி/2454]

## டிப்ளோமா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக்.12

தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் படிப்பு கல்வி டிப்ளோமா 1995 — 1996 ஆம் ஆண்டுக்கானபயிற்சி நெறியை இந்துக் கல்லூரி நிலையத்தில் தொடருவதற்காக பதிவு செய்த புதிய மாணவர்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. த. வில்வநாதன் கேட்டுள்ளார். (ஐ)


A/L 96

DAY CLASS

ஆரம்பமாகியுள்ளது

[பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது]

கணக்கியல்

Mr. செளந்தி

வர்த்தகம்

Mr. பசில்

பொருளியல்

Mr. இராஜேஸ்வரன்

அளவையியல்

Mr R. P. சர்மா

SHAMROCK

யாழ் சுண்டுக்குளி

(38966)


## திர்வு யோசனையை பரிசீலிக்க

# நவம்பரில் தெரிவுக் குழு கூடும்; விவாதம் புதுவருடத்திலும் நீடிக்கும்?

கொழும்பு, ஒக். 12

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகள் அடுத்து வரும் சில வாரங்களில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டாலும்—

அது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விவாதங்கள் இவ்வாண்டு முடிவடையும் போதும் பூர்த்தியாகமாட்டாது.

மேற்படி யோசனைகள் தொடர்பான விடயங்களை ஆலோசிப்பதற்காக நவம்பர் மத்தியிலேயே தெரிவுக்குழு கூடும் என்றும்—

ஆனால் அந்த ஆலோசனைகள் தொடர்பான தெரிவுக்குழு அமர்வுகள் இவ் ஆண்டு இறுதிக்கு முன் பூர்த்தியாகா என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை செயற்படுத்துவது தள்ளிப் போடப்படுவதால், அதனுடன் சேர்த்து செயற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விவகாரமும் தள்ளிப் போடப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் சுட்டிக் காட்டின. (உ)

## அரசின் பொய் பிரசாரத்தால்

# "நோர்" கப்பல் மூலம் விமானத்தை மீட்கும் வாய்ப்பு கை நழுவியது!

கொழும்பு ஒக். 12

கடலில் வீழ்ந்த ''அன்ரனோவ்'' விமானத்தை குறுகிய காலத்தில் மீட்பதற்குக் கிடைத்த ஓர் வாய்ப்பை தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் நடத்திய தவறான பிரசாரத்தில் அரசு இழந்து விட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கக் கப்பலான ''நோர்'' மூலம் விமானச் சிதைவுகளை மூன்று நாட்களுக்குள் அடையாளம் கண்டு, இரண்டு வாரங்களுக்குள் மீட்டு எடுக்கும் யோசனை அரசின் தவறான பிரசாரத்தால் கைவிடப்பட்டது என்று பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2 ஆயிரம் பேருடன் 3 ஆயிரம் அடி ஆழத்துக்கு கடலுக்குள் புதைந்து போன மிகப் பெரும் கப்பலான ''டைட்டானிக்'' கப்பலின் சிதைவுகள் மேற்படி 'நோர்' கப்பல் மூலமே கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த ''நோர்'' கப்பலின் ஸ்ரீலங்கா முகவர்கள் ''அன்ரனோவ்'' விமானச் சிதைவுகளை மீட்கும் நடவடிக்கையை இலவசமாகச் செய்து தர முன் வந்திருந்தனர்.

எரிபொருள் நிரப்புவதற்காக ''நோர்'' கப்பல் கடந்த 28ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்றது.

அவ்வேளையில் ''அன்ரனோவ்'' சிதைவுகளைக் கண்டுபிடிக்கவும், இரண்டு வாரங்களுக்குள் அவற்றை மீட்டெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக, 'கொழும்பு என்ஜினியரிங் என்ரர்பிரைஸஸ் லிமிட்டெட்'' நிறுவனத்தின் தலைவர் கிரான் அத்தபத்து குறிப்பிட்டார்.

ஆனால் —

விமானத்தின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாகவும் —

விமானத்தில் பயணம் செய்தோரின் உறவினர்கள் கடலில் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்காக கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் —

தொலைக்காட்சியில் பிரசாரப்படுத்தப்பட்டது.

இதனால் 'நோர்' கப்பல் மூலம் விமானத்தை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டதாகவும் —

சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய இடங்களில் இருந்து மீட்பு அணிகளை அழைத்து வரும் ஏற்பாடும் இடையில் நிறுத்தப்பட்டதாகவும் —

கிரான் அத்தபத்து மேலும் தெரிவித்தார். [உ]

### அதிபர்கள் ஆசிரியர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

கோப்பாய், உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான அவசர சந்திப்பு இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கான சந்திப்பு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் —

உடுவில் கல்விக் கோட்டத்துக்கான சந்திப்பு இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு இராமநாதன் கல்லூரி லும் — நடைபெறவிருக்கின்றன. (ஒ-3)

### புலிகளின் குரல் வானொலியில்

12 - 10 - 1995

வியாழன் இரவு

★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — நோய் தீர்க்கும் மூலிகைகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — ''தமிழீழத்தின் சக்திவளங்கள்'' — குறுநாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வும் — [28]
★ 8-50 — எங்களின் தேசம் — [35]

13 - 10 - 1995

வெள்ளி காலை

★ 7 02 — மாவீரவணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
★ 8-00 — மணிவரை தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5 02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5 15 — மழலைகளுக்கான
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — பொன் விளையும் பூமி
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — [illegible]

# அன்ரனோவை மீட்க ரூ 5 கோடி செலவாகும்!

## பூர்வாங்க மதிப்பீட்டில் தகவல்

கடலில் வீழ்ந்த ''அன்ரனோவ்'' விமானத்தை மீட்பதற்கு ஐந்து கோடி இருபது லட்சம் ரூபா தேவைப்படும் என பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றனவாம்.

— ''சண்டே லீடர்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது

விமானத்தை மீட்க உதவும்படி இந்தியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகியவற்றை ஸ்ரீலங்கா விமானப்படை கோரியுள்ளது.

மீட்பு பணியில் ஈடுபடக்கூடிய அமெரிக்க நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளும்படி அமெரிக்காவில் உள்ள ஸ்ரீலங்கா இராஜதந்திர வட்டாரங்கள் கோரப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.


யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

'' வர்த்தகி ''

மலர் வெளியீடும் வணிக தின விழாவும்

13 10-1995 (வெள்ளிக்கிழமை ) காலை 9மணிக்கு நடைபெறவுள்ள இவ்விழாவில் அனைத்து வர்த்தக மாணவர்களையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வர்த்தக மாணவர் ஒன்றியம்,

1995 / 1996.

(சி-2452)



காரைநகர்

பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டது]

374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

விசேட பொதுக் கூட்ட இடமாற்ற அறிவித்தல்

மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் வட்டுக் கோட்டை மாவடியில் அமைந்துள்ள காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறமாட்டாது. இதற்குப் பதிலாக 15-10-95 ஞாயிற்றுக்கிழமை அன்று வழக்கம்பரையில் அமைந்துள்ள காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியசாலை மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெறும் என்பதை பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறியத்தருகிறோம். தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

11-10 95

[சி/2453]

க. நடராசா

செயலாளர்



தென்மராட்சி பிரதேச

செயலக ஊழியர் நலன்புரி சங்க

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆவது பரிசு .. 7035
2 ஆவது பரிசு .. 6072
3 ஆவது பரிசு .. 6174

ஆறுதல் பரிசுகள் [10]

| | |
|---|---|
| 5215 | 6723 |
| 5372 | 1327 |
| 6982 | 4447 |
| 3211 | 5027 |
| 5353 | 6762 |

பரிசில்களை 10-11-1995 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ரிக்கெட்டை இப் பணிமனையில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

[சி/2455]

செயலாளர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய தீர்வுத் திட்டம்; அரசு பரிசீலிக்கிறது!

கொழும்பு, ஒக் 12

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதியதோர் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக அரசுடன் தொடர்புடைய வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது முன் வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனையை சிறுபான்மை மக்களும், பெரும்பான்மை மக்களும் ஏற்க முடியாது எனப் பிடிவாதமாக இருப்பதால் இப் புதிய முயற்சியில் ஈடுபட அரச தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தீர்வு யோசனையை முன் வைத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க வழி கிட்டாது போனால் தாம் பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறிவிடப் போவதாக சமீபத்தில் ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்து —

அரசுடன் தொடர்புடைய பெரும்பாலானோர் புதிய யோசனையை முன் வைப்பதற்கு தாம் ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளனர்.

அதை அடுத்தே இந்த முடிவுக்கு அரச வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுயோசனையை மக்கள் ஏற்காது போனால் அதைக் கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கடந்த வாரம் பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பௌத்த மகா சங்கத்தினரின் எதிர்ப்பு வலுவடைந்து வருவதால் தற்போதைய யோசனையை ஒரு புறம் ஒதுக்கி விட்டு புதிய தீர்வு யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதே சிறந்த வழி எனப் பலரும் அரசுக்கு ஆலோசனை வழங்கியதைத் தொடர்ந்து அரச புதியமுயற்சியில் இறங்க விரும்புவதாகத் தெரிய வருகிறது

புதிய யோசனைகளை தயாரிப்பது குறித்து அரச தனது முடிவை இன்னும் சில தினங்களுக்குள் நாட்டு மக்களுக்கு அறிவிக்கலாம் என பெரும்பாலும் நம்பப்படுகிறது — என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தன்னைக் கொல்ல சதி என்கிறார் கருணாநிதி!

சென்னை, ஒக். 12

தன்னை குண்டு வைத்துக் கொலைச் சதி நடப்பதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சதியின் பின்னணியில் தமிழக முதல்வர் உள்ளதாக அவர் மறைமுகமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

எனது உயிருக்கு ஆபத்து என கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பே மாநில அரசு மூலம் மத்திய அரசு அறிவித்திருந்தது.

அதன் பின் எனக்குப் பொலீஸ் பாதுகாப்புத் தரப்பட்டது.

நாம் எதிர்நோக்கியுள்ள எதிரி சாதாரண எதிரி அல்ல; சர்வாதிகார குணம் கொண்ட எதிரி. அவர் இன்று ஆட்சித் தலைமையில் ஆதிபராசக்தியாக உள்ளார் — என்று கருணாநிதி மேலும் தெரிவித்தார். [எ]

# தேர்தலை குழப்ப படை அதிகாரிகள் தீட்டிய சதித்திட்டம் அம்பலம்!

கொழும்பு, ஒக். 12

கடந்த ஆண்டு ஓகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலை வன்செயல்கள் மற்றும் கலவரங்கள் மூலம் குழப்புவதற்கு இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று சதித்திட்டம் தீட்டியிருந்தது. இரகசியப் பொலீஸாரின் புலன் விசாரணைகளில் இருந்து இது தெரிய வந்ததாக சிரேஷ்ட புலனாய்வாளர்கள் சிலர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டிருக்கிறார்கள்.

தற்போது முப்படைகளில் பணியாற்றும் படை அதிகாரிகள், ஓய்வுபெற்ற படை அதிகாரிகள், குறிப்பிடக்கூடிய முக்கிய அரச அதிகாரிகள் சிலர் மற்றும் சில அரசியல்வாதிகள் ஆகியோர் சதித்திட்டம் தீட்டிய குழுவில் அடங்கியிருந்தனர்.

காலி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களைக் கைப்பற்றவும், வேட்பாளர்களைக் கொல்லவும் —

இதன் மூலம் தேர்தலை ரத்துச் செய்யும் நிலைக்கு அதிகாரிகளைத் தள்ளவும் —

அவர்கள் திட்டமிட்டிருந்தனர் என புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேர்தலைக் குழப்புவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட சதி ஒன்று தயாராக இருந்தது என்பதையும் —

இது தொடர்பாக படையினருக்கு விடுக்கப்பட வேண்டிய உத்தரவுகள் கூட தயாரிக்கப்பட்டிருந்தன என்பதையும் —

நிரூபிப்பதற்கு தேவையான சாட்சியங்களை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (உ)

# 429 குடும்பங்கள் கரவெட்டியில் தஞ்சம்!

வடமராட்சி, ஒக். 12

வலிகாமம் கிழக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த 429 குடும்பங்கள் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தற்போது தங்கியுள்ளன.

இவர்களில் 286 குடும்பங்கள் காப்புதூ கந்தசுவாமி கோயில், பிள்ளையார் கோயில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அத்தணன் திடல் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் தங்கியுள்ளன. ஏனைய 143 குடும்பங்கள் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளன.

இக்குடும்பங்களுக்கு முதல் மூன்று தினங்களும் கரவெட்டி பிரதேச செயலகமும் அடுத்த மூன்று தினங்களும் மெதடிஸ்த திருச்சபையும் சமைத்த உணவுகளை வழங்கின.

தற்போது இவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க கரவெட்டி பிரதேச செயலகம், யாழ் செயலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. [ஐ-173]

# விமான நிலைய சூழலில் பறக்கும் பட்டங்கள் குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 12

விமான நிலைய சுற்றாடலில் பறக்க விடப்படும் பட்டங்கள், பலூன்கள் என்பன குறித்து கொழும்பில் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பலூன்கள் பட்டங்கள் மூலம் விமானங்களுக்கு ஊறு விளைவிக்கப்படலாம் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

1950 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க விமான போக்குவரத்து சட்டத்தின் — 1955 ஆம் ஆண்டின் விமானப் போக்குவரத்து விதிகளின் 247 ஆவது பிரமாணத்தின் படி

விமான நிலையம் ஒன்றின் மூன்று மைல் சுற்றாடல்களில் — அல்லது 300 அடி உயரத்தில் — பட்டம் ஒன்றை அல்லது பலூனைப் பறக்க விடுவதை தடை செய்யும் சட்டம் மீண்டும் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இத்தகைய பட்டங்கள் பலூன்கள் என்பன விமானங்களுக்குப் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## "சங்கேதம்" மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 12

மானிப்பாய் மகளிர் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் "சங்கேதம்" மலர் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கலந்து கொள்வார். (எ-90)

## சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஒக் 12

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் "என்னுடையதும் அம்மாவினுடையதும்" என்ற சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ கலை இலக்கிய பேரவையின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவிற்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார். (எ)

# விசர்நாய்க் கடி தடுப்பு ஊசி நாடெங்கும் தட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 12

நாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளில் விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் இதனால் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

விசர் நாய்க்கடிக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்து கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற போதிலும்—

இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பு மருந்தையே மக்கள் நாடுவதாகக் கொழும்பு ஆஸ்பத்திரி மருத்துவ அத்தியட்சகர் டாக்டர் ஹரோல்ட் சில்வா கூறினார்.

இந்த வருடத்துக்கான ஏ ஆர். வி மருந்து வகை தற்போது வந்துசேர்ந்திருப்பதாகவும், அவை விரைவில் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# துறைமுக ஒப்பந்தம் ரத்தானால் அமைச்சர் அஷ்ரப் பதவி விலகுவார்?

கொழும்பு, ஒக். 12

காலி துறைமுக ஒப்பந்தத்தை அரசு ரத்துச் செய்யுமானால் தாம் பதவி விலகப் போவதாக துறைமுக கப்பல் போக்குவரத்து, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

காலிதுறைமுக ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சர் அஷ்ரப் மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆறப்போடாமல் இம்மாதமே நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்க ஐ. தே. க. முயற்சி செய்து வருகிறது.

1996 ஜனவரி மாதத்துக்கு முன் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கு நாள் ஒதுக்க முடியாத நிலைமை முன்னர் இருந்தது.

இவ்வருடம் முடிந்த பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வருமானால் காலி துறைமுக ஒப்பந்தம் ஓரளவு மறந்து போன விடயமாகி விடும். அதனால் அந்தப் பிரேரணை அமைச்சர் அஷ்ரப்பை பாதிக்காது என்று நம்பப்பட்டது என்றும் —

ஆனால் ஐ.தே.க. அதனை விரும்பவில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை இம்மாதமே — சூட்டோடு சூடாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எடுப்பதில் ஐ. தே. க. முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஷ்ரப்புக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இம்மாதம் நடுப்பகுதியில் விவாதத்துக்கு எடுக்கப்படும் சாத்தியங்கள் இருப்பதால் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [ஐ-எ]

# மீண்டும் வட்டார முறையில் உள்ளூராட்சி தேர்தல்!

## அரசு ஆலோசிக்கிறது

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை பழைய வட்டார அடிப்படையில்— அதிகூடிய வாக்குகளைப் பெற்று முதலாவதாக வருவோரை உறுப்பினராகத் தெரிவு செய்யும் முறையில் — நடத்துவதற்கு அரச ஆலோசித்து வருகின்றது.

தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றி, பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு வழிசெய்யும் சட்டமூலம் ஒன்றை [illegible] கூட்டுறவு, மாகாணசபைகள், உள்ளூராட்சி [illegible] தியத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட அரசுக்கு சமர்ப்பித்திருக்கின்றார். (ஐ-உ)

# சமாதான நிலைக்காகவே நாம் போராடுகிறோம்

## மாலதி நினைவு நிகழ்வில் உரை

சாவகச்சேரி, ஒக். 12

நிரந்தரமான சமாதானம் தமிழீழத்தில் நிலவ வேண்டும். அந்நிலையை நாம் விரும்புகின்றோம். அதற்காகவே போராடுகின்றோம்.

தமிழீழ பெண்கள் தினம் மற்றும் களப்பலியான முதல் பெண் போராளி மாலதியின் 8 ஆவது நினைவு நாள் ஆகியவற்றை முன்னிட்டு சாவகச்சேரி பஸ் நிலையம் முன்னால் அமைக்கப்பட்டுள்ள மாலதியின் திருவுருவப்படத்துக்கு முன்பாக அஞ்சலி நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மகளிர் படையணியைச் சேர்ந்த செல்வி சந்திரிகா உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு மகளிர் படையணியைச் சேர்ந்த செல்வி நிஷாந்தி தலைமையில் நடைபெற்றது.

செல்வி சந்திரிகா மேலும் கூறியதாவது;

எமது தேசத்தின் விடுதலையில் பெண்கள் பங்கு பற்றுவதன் மூலம் இத்தேசம் விடியும். இந் நிலையில் பெண்கள் விடுதலை பெற வேண்டும்.

உலக அரங்கில் சர்வதேச ரீதியில் பெண்கள் தினம் மார்ச் 8 இல் கொண்டாடப்படுகிறது ஆனால் தமிழீழத்தில் பெண்கள் தினம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

எமது தேசம் விடுதலை பெறப் போகின்றது. இதற்காக தமிழ்ப் பெண்கள் யாவரும் மாலதியின் இலட்சியத்தை மனதில் கொண்டு உறுதி எடுத்துக் கொள்வோம். என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் சிதம்பரம் நீதிமன்றை அவமதித்தார்!

### சென்னை நீதிமன்றில் வழக்கு

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதற்காக—

மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்துக்கு எதிராக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள பேரறிவாளன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகள் துரித கெதியில் நடைபெறுவதைக் கண்காணிக்க உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தை பிரதமர் நரசிம்மராவ் நியமித்தார்.

அண்மையில் தொலைக்காட்சியில் உரையாற்றிய அமைச்சர் சிதம்பரம்—

ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளிகள் விரைவில் தண்டிக்கப்படுவார்கள் என்றும் — தண்டனை மிகக் கடுமையாக இருக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தப் பேச்சு மறைமுகமாக நீதிபதியை நிர்ப்பந்தம் செய்கிறது என்றும்—

அரசியல்வாதிகள் இவ்வாறு பேசுவது நீதித்துறையை பாதிக்கிறது என்றும் கூறியே அமைச்சர் சிதம்பரத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது (எ)

## செயலக ஊழியருக்கு பொருள்கள்

நவாலி, ஒக் 12

யாழ். செயலக நலன்புரிச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கு 5 கிலோ மா ஒரு கிலோ சீனி ஒரு லக்ஸ்பிறே என்பனவற்றை கட்டுப்பாட்டு விலையில் தற்போது வழங்கி வருகின்றது. (ஐ-100)

## நான்கு நீதிபதிகளுக்கு எதிராக குற்ற விசாரணை பிரேரணைகள்!

ஜனாதிபதிக்கும் தற்போதைய அரசுக்கும் எதிரான — நாற்பதுக்கும் அதிகமான — தீர்ப்புகளை வழங்கிய நான்கு இரேஷ் — நீதிபதிகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் அரசுத் தரப்பு எம். பிக்கள் ஈடுபட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தொலைக்காட்சி பேட்டி ஒன்றின் போது —

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சில தீர்ப்புகளை விமர்சித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்து வெளியிட்டதைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்று ஸ்ரீலங்கா சட்டத்தரணிகள் சம்மேளனத்தில் எடுக்கப்படவிருக்கையில் —

### விரைவில் நாடாளுமன்றுக்கு வரும்

அந்த நடவடிக்கைக்கு பதில் நடவடிக்கையாகவே தாங்கள் நான்கு நீதிபதிகளுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரத் திட்டமிடுவதாக அரசுத் தரப்பு எம். பிக்கள் சிலர் தெரிவித்தனர்.

"அரசாங்கத்தை சேவைப் படுத்தும் விதத்தில் தீர்ப்புகளை' வழங்கியுள்ள இந்த நீதிபதிகளைப் பற்றிய மேலதிக விவரங்களைச் சேகரித்து வருகின்றோம். அவை தயாரானதும் நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணைகளைக் கொண்டு வருவோம். — என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ)

## சந்திரசுவாமி பற்றிய புலனாய்வுத்துறை ஆவணம்

### சமர்ப்பிக்குமாறு உத்தரவு

புதுடில்லி, ஒக்,12

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் ஜெயின் கமிஷன் சந்திரசுவாமியின் நடவடிக்கைகள் சம்பந்தமான புலனாய்வு நிறுவன ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்ட பாது

[7 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர்களை கொழும்பு வரவேண்டாம் என்று மறைமுக 'அழுத்தம்' தரும் சோதனைகள்!

## மனித உரிமை மருந்துக்கும் இல்லை

கடந்த வார காலத்தை கொழும்பில் கழித்த உதயன் வலிகாமம் மேற்குச் செய்தியாளர்—

அங்கு வாழும் தமிழர் அவலத்தை, அவர்களின் 'அரிகண்டமான' வாழ்க்கையை இங்கே படம் பிடித்துக் காட்டுகிறார்.

கொழும்பில் தமிழர்களின் வாழ்வு 'நித்திய கண்டம்' என்ற நிலையிலேயே உள்ளது.

அமைதியும் உயிர்ப்பாதுகாப்பும் கிடைக்கும் என்று நினைத்து கொழும்புக்குச் சென்றவர்களும் அங்கு வாழ்பவர்களும் எந்த நேரமும் எதுவும் நிகழலாம் என்ற அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

தமிழர்கள் சோதிக்கப்படுவது கொழும்பில் அன்றாடச் செய்தியாகும்.

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு அல்லது திருகோணமலையிலிருந்து அண்மையில் கொழும்புக்குச் சென்ற தமிழர்கள் அல்லது அங்கே நிரந்தரமாக வசிக்கின்ற தமிழர்கள் அல்லது சிங்கள ஆணை அல்லது சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்து குடும்பமாக வாழும் தமிழர்கள் அனைவருமே சோதனைகள், விசாரணைகள், கைதுகள் ஆகியவற்றுக்கு உள்ளாகின்றனர்.

சுருங்கக்கூறின் தமிழர் என்றால் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றார்கள்.

பொலிசாரும் இராணுவத்தினரும் கடற்படையினரும் அடிக்கடி கொழும்பில் நடத்தும் தேடுதல், சுற்றிவளைப்பு ஆகியவற்றின் போது தமிழர்கள் — ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், யுவதிகளும், வயோதிபர்களும் — கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

வீதிகள், வீடுகள், விடுதிகளில் அதிகாலை, நள்ளிரவு ஆகிய நேரம் உட்பட எந்த நேரத்திலும் இந்த சோதனை கைதுப்படலம் இடம் பெறுகின்றது.

### அளவற்ற அவலங்கள்

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அடைக்கப்பட்டிருக்கும் அறைகளில் அனுபவிக்கும் அவலங்களோ அளவற்றவை.

அறையோ குறுகியது; உணவோ உறவினர் எவரும் கொண்டுவர வேண்டும்; குறைவான நீரே குடிப்பதற்குக் கிடைக்கும்; பொலீசாரின் உணவோ ஒரு நாளைக்கு ஒரு தடவைதான் வழங்கப்படும்; மலசலம் கழிப்பதும் அறையில் உள்ள பிளாஸ்ரிக் பரல்களிலேயே செய்யப்பட வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?

தமிழராகப் பிறந்ததுதான். வேறு என்ன!

### தரகர் வட்டம்

கைது செய்யப்படுவோரிடம் பணம் கறப்பதற்கு என்றே கொழும்பில் ஒரு கொடிய அமைப்பு செயற்படுகின்றது. பொலீஸார், தரகர் என்று இவர்கள் கைது செய்யப்பட்ட தமிழர்களை அச்சுறுத்தி ஏமாற்றி பணம் பெறுகின்றார்கள்.

பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வெளிநாட்டுத் தொடர்பு உண்டா, வெளிநாடுகளில் உள்ள உறவினருடன் தொடர்பு கொள்வதற்காகவா இவர்கள் கொழும்பு வந்திருக்கிறார்கள் என்பதனை விசாரித்து அறிவதில் பொலிஸார் வெகு அக்கறையாக உள்ளார்கள். அது குறித்து ஏதாவது ஒரு சிறு துரும்பான தகவலைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்குடன் துருவித் துருவி ஆராய்வார்கள்.

வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் எனக் கண்டு கொண்டால் அவர்களை விடுவிப்பதற்கான "கட்டணம்" உயர்த்தப்பட்டுவிடும்.

தரகர் வட்டத்துக்குத் துப்புக் கொடுத்து அவர்களூடாகவே "கட்டணம்" அறவிடப்படும்.

### அராலி இளம் பெண் கைது

கடந்த வாரம் கொழும்பிற்கு அண்மையில் [illegible] விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான இளம் பெண் ஒருவரை பொலீசார் கைது செய்தனர்.

இவர் அராலியைச் சேர்ந்தவர். நள்ளிரவு நேரத்தில் கைது செய்யப்பட்ட இந்த இளம் பெண்மணியுடன் யுவதி ஒருவரையும் கைது செய்து சுமார் நாலு மைல் தூரம் நடத்தி தங்களுடன் பொலீஸ் நிலையம் கூட்டிச்சென்றனர். பொலிஸ் நிலையத்தில் இருவரையும் தொடர்ந்து மூன்று நாட்களாக தடுத்து வைத்தனர்.

ஐந்து பிள்ளைகளின் தாயாரான இளம் பெண்மணியின் முழு விவரங்களையும் திரட்டிய பொலீசார் இந்தப் பெண்மணியிடம், "புலிக்குப் பணம் கொடுக்க உமது கணவரிடம் பணம் வாங்க வந்திருக்கின்றீர். புலிக்கு பணம் கொடுப்பது போல எங்களுக்கு பணம் தரவேண்டும்" என்று விசாரணையின் போது பயமுறுத்தினார்கள்.

இவர் பொலீசாரிடம் எனது கணவர் கடும் சுகயீனமாக இருக்கின்றார் என்றும் பணம் அனுப்ப மாட்டார் என்றும் கூறி ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

தடுத்து வைக்கப்படுகின்றவர்களை பார்க்கச் செல்பவர்கள் தரகர்கள் மூலமாகவே செல்ல வேண்டியுள்ளது. தரகர்கள் மூலமாக செல்கின்றவர்கள் மட்டுமே ஒருவாறு தமது உறவினர்களை பார்த்து உணவு கொடுத்து திரும்பிவர முடியும். பார்க்கச் செல்கின்றவர்களும் பொலீசாரினால் தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

### சிற்றாள் வேலை

பொலீஸ் நிலையம் ஒன்றுக்கு தனது தடுத்து வைக்கப்பட்டிருந்த சகோதரியை பார்க்கச் சென்ற வடபகுதியில் அரசாங்க தொழில் புரியும் ஒருவர் பொலீஸ் நிலையத்தில் சிற்றாள் வேலை பார்க்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இவருக்கு பொலீஸார் தட்டிச்ச இயற் [illegible] வா என்று கூறி வேலை வாங்கியதுடன் வெளியில் உள்ள கடைபோன்றில் சிகரட் வாங்கி வருமாறும் கூறி அனுப்பியிருக்கின்றனர்.

புலனாய்வுத் துறையினரிடம் இருந்து அறிக்கைகள் கிடைத்து விடுதலை செய்யவாம் எனப்படுகின்ற தமிழர்களை பொலீஸ் நிலையங்களில் இருந்து கூட்டிக்கொண்டு செல்வதற்கு பொலிசாருக்கு "சந்தோசம்" வழங்க வேண்டும். இதற்கும் பல தரகர்கள் இருக்கின்றார்கள்.

**கண்டபடி கைது செய்யப்படும் தமிழர்கள் பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள்.**

**மனித உரிமைகளா? தமிழர்களுக்கு அப்படியும் உரிமை இருக்கிறதா என்று கேட்கும் அளவுக்கு உள உடல் சித்திரவதைகள் அங்கு நடைபெறுகின்றன.**

விடுதலை செய்யப்படுகின்றவர்களை கொழும்பு முகவரியுடைய அடையாள அட்டை உள்ள ஒருவரே கூட்டிச் செல்ல முடியும். இவர் தனது அடையாள அட்டையைச் சமர்ப்பித்து படிவம் ஒன்றில் கையொப்பம் இட்டுக் கூட்டிச் செல்ல முடியும். வடபகுதியைச் சேர்ந்தவர்கள் கூட்டிச் செல்வதானால் பணம் கொடுக்க வேண்டும்.

பல்லாண்டுகளாக கொழும்பில் வசித்து அங்கு சொந்த வீடு, காணி முதலியன உள்ள சில தமிழ் ஆண்களும் பெண்களும் சிங்களவரைப் போல உடையணிந்து, தமிழ் மொழியிலேயே பேசாமல் வாழும் பரிதாபத்துக்குரிய போலி நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

ஆனால் இவர்கள் என்ன செய்தும் பயனில்லை. தமிழ்ப் பெயர்கள் இருப்பதால் சோதனையின் போது எவ்வித சலுகையும் இவர்களுக்கு இல்லை.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இன்று தமிழர்கள் சுதந்திரமாக நடமாடவோ வீடுகளிலும் விடுதிகளிலும் தங்கியிருக்கவோ கூட முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணமே தெரியாத நூற்றுக்கணக்கான கொழும்புத் தமிழ் இளம் யுவதிகள் இன்று தனியார்துறைகளில் தாம் மேற்கொண்ட தொழில்களை நிறுத்திவிட்டு வீடுகளில் பெருமூச்சு விட்டவாறு வாழ்கின்றனர்.

இன்றைய கொழும்பு, சகல இடங்களிலும் முப்படைகள் குவிக்கப்பட்டு முழத்துக்கு முழம் சோதனைத் தடைகள் போடப்பட்ட நிலையிலேயே காட்சியளிக்கின்றது. கொழும்பில் இன்றைய தமிழர் வாழ்வு சோதனை மேல் சோதனைகள் நிறைந்ததாகும்.

மனித உரிமைகள் என்பது கொழும்புத் தமிழருக்கு மருந்துக்கும் கிடையாது என்ற போக்கில் பொலீஸாரும் படையினரும் நடந்து கொள்கின்றனர்.

வடக்கு - கிழக்குத் தமிழர்களைக் கொழும்புக்கு வர வேண்டாம் என்றும் —

இங்குள்ள உறவுகளை மறந்து அங்கேயே நிரந்தரமாக வாழும் தமிழர்களை வெளியேறுமாறு கூறுவது போன்றும் —

பொலீஸாரும், படையினரும் மறைமுகமாகச் சொல்வது போன்று உள்ளது அவர்களின் கெடுபிடிகள்.

இந்த "அரிகண்டமான" வாழ்க்கை தேவைதானா என்று கேட்கும் அளவுக்கு அங்கு நிலைமை மோசமாகி விட்டது!

வி. ரி கதிர்காமநாதன்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சேர இந்தியாவுக்கு முழு உரிமை உண்டு

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முழு உரிமையையும் இந்தியா கொண்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் ஐ. நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ள அமைச்சர் கதிர்காமர் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றினார்.

ஐ. நா பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் ஐ. நா அமைப்பில் செய்யப்படும் சீர் திருத்தங்களை இலங்கை அரசு ஆதரிக்கிறது — என்று அப்போது அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தும் போது அதில் ஜேர்மனியையும், ஜப்பானையும் மட்டும் சேர்த்தால் போதாது என்வரும் நாடுகள் கருதுகின்றன.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா என்பனவற்றுக்கு ஐ. நாவில் மேலும் அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டிய அவசியம் என்றும் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டிக் காட்டினார்.

செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது தொடர்பாக எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் கதிர்காமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ஐ)

## 'வெளிச்சம்' இன்று வரும்

யாழ்ப்பாணம், ஒக். 12

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான "வெளிச்சம்" — கலை, இலக்கிய சமூக இதழின் — ஐப்பசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனைப்பதிவுகளுடன் காழமையான பல அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. [ஐ]

## ★ வடக்கில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என்ற

# புனர்வாழ்வு அமைச்சின் கூற்றை நிரூபிக்கும்படி ந. ச. ச. கட்சி சவால்!

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லை என புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்திருக்கும் கூற்றின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும்படி நவ சமசமாஜக் கட்சி அரசாங்கத்துக்குச் சவால் விடுத்திருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அக்கட்சி உத்தியோகபூர்வமாக எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கோரியிருக்கின்றது.

தற்போதுள்ள சூழ்நிலையில் வடக்கிற்கு போதியளவு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யும் படியும் அக்கட்சி இக்கடிதத்தில் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

"யாழ். மாவட்டத்தின் மாதாந்த தேவை ஆறாயிரம் முதல் ஏழாயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே என புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆனால் முன்னைய அரசின் கீழ் இயங்கிய— வடக்கு-கிழக்கு தொடர்பான அமைச்சரவை இணைப்புக் குழுவின்— அப்போதைய மதிப்பீட்டின்படி யாழ். மாவட்டத்தின் மாதாந்த தேவை ஆகக் குறைந்தது 10 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும் "— என்று அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ். அரச அதிபருக்கு அனுப்பப்படும் பொருள்களின் அளவு பற்றிய விவரம் மாதந்தோறும் வெளியிடப்பட வேண்டும் என்றும் அக்கட்சி அக்கடிதத்தில் கோரியுள்ளது.

வடக்கில் பொருள்களின் விலை மிகவும் அதிகரித்திருப்பதும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"தமது அன்றாட வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையாவது விநியோகிக்க வேண்டும் என்பதைத்தான் அங்குள்ள மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்".

"வடக்கு மக்களின் உயிருடன் விளையாடுவதை அனுமதிக்காத விதத்தில் இந்த விடயம் கையாளப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம்"— இவ்வாறு நவசமசமாஜக் கட்சி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கோரியுள்ளது. (உ)

## ஆந்திரா அரசியலில் மீண்டும் புதிய திருப்பம்:

# சந்திரபாபு நாயுடு தரப்பிலிருந்து ராமராவ் பக்கம் எம்.எல்.ஏக்கள் தாவல்

## பதினான்கு பேர் மீண்டும் குத்துக்கரணம்

புதுடில்லி, ஒக். 12

ஆந்திரா மாநிலத்தின் அரசியல் நிலைமை தற்போது சுவாரசியமான புதியதோர் திருப்பம் கண்டுள்ளது.

தெலுங்கு தேசம் நாடாளுமன்றக் கட்சித் தலைவரான டாக்டர் டி. வெங்கடேஸ்வர ராவ் தலைமையில் 14 எம். எல். ஏக்கள் முன்னாள் முதலமைச்சர் என். டி. ராமராவின் தரப்புக்கு திரும்பிச் சென்று விட்டதை அடுத்தே இந்தப் புதிய பரபரப்பான திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

முன்னாள் முதலமைச்சர் என். டி. ராமராவின் கட்சியில் இருந்த டாக்டர் டி. வெங்கடேஸ்வரன் பின்னர் ராமராவின் மருமகனான சந்திரபாபு நாயுடுவுக்கு ஆதரவு அளித்து அவருடன் சேர்ந்து கொண்டார்.

தற்போது சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி ஆந்திர மாநிலத்தில் ஆட்சியில் உள்ளது.

இவ்வேளையில் —

முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மாநில விவகாரங்களை கையாளும் விதம் குறித்து அதிருப்தி அடைந்துள்ள டாக்டர் டி. வெங்கடேஸ்வர ராவ் — முன்னாள் முதலமைச்சர் ராமராவை அவரது இல்லத்தில் சந்தித்து வேறு 14 எம். எல். ஏக்களுடன் சேர்ந்து தாமும் என். டி. ராமராவ் குழுவில் சேருவதான முடிவை அவரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கு எதிராக உரிமை வினா ஆணைப்பத்திரம் ஒன்றை வெளியிடுமாறு கோரி தேசிய முன்னணி தலைவர் என். டி. ராமராவ் ஆந்திர மாநில உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இது குறித்து நீதிமன்றின் முன்னிலையில் தமக்காகத் தாமே போராட எண்ணியுள்ள ராமராவ்;

கடந்த ஒகஸ்ட்டில் ஆந்திராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின்போது மாநில ஆளுநரும், சட்டப் பேரவைச் சபாநாயகரும் தமது அரசை நிலைகுலையச் செய்யும் விதமாக சதித் திட்டம்தீட்டினர் என்று ராமராவ் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-ஐ)

# மேற்குக் கரையில் இருந்து படைகளை இஸ்ரேல் மீண்டும் திருப்பி அழைக்கிறது

## படை அலுவலகமும் பி. எல். ஓ.விடம் ஒப்படைப்பு

ரெல் அவிவ், ஒக். 12

மேற்குக் கரைப் பகுதியில் இருந்து இஸ்ரேல் தனது துருப்புக்களைத் திருப்பி அழைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

மேற்குக் கரைப் பகுதியில் இருந்து இஸ்ரேலிய இராணுவத்தினரை விலக்கிக் கொள்ளும் முயற்சியில் முதல் நடவடிக்கையாக, சல்சில் என்ற கிராமத்தில் இருந்த தமது இராணுவ அலுவலகத்தை, பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் இஸ்ரேலிய இராணுவத்தினர் ஒப்படைத்தனர்

மேற்கு கரையில் 28 ஆண்டுகால இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் முடிவை இந்தச் சம்பவம் பிரதிபலிப்பதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இஸ்ரேலுக்கும் —பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே கடந்த மாதம் வாஷிங்டனில் கைச்சாத்தான அமைதி உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (எ-ஐ)

# பொஸ்னிய சேர்பியரின் நிலைகள் மீது நேட்டோ விமானங்கள் குண்டு வீச்சு

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் தாமதமாகுமா?

பொஸ்னியா — சேர்பிய சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது தாமதமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொஸ்னியாவில் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வருவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்பதாக பொஸ்னிய சேர்பியர்களின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக நேட்டோ போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதனை அடுத்தே போர் நிறுத்தம் தாமதமாகலாம் எனத் தெரிய வந்தது.

முன்னாள் யூகோஸ்லாவியாவின் 6 சமஷ்டி அமைப்புகளில் ஒன்றான பொஸ்னியா நான்கு ஆண்டுகளுக்கு முன் தனி நாடாகச் சுதந்திர பிரகடனம் செய்து கொண்டதும்—

பொஸ்னியாவில் ... யைக் கைப்பற்றும் யுத்தத்தில் பொஸ்னிய சேர்பியர்களும் பொஸ்னிய முஸ்லிம்களும் ஈடுபட்டிருப்பதும் தெரிந்தவையே.

இந்த யுத்தத்தில் சேர்பியர்களின் கையே ஓங்கி உள்ளது.

பொஸ்னியப் பிரச்சினைக்கு இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட தீர்வு முயற்சிகள் பொஸ்னிய சேர்பியர்களின் பிடிவாத போக்குக் காரணமாக தோல்வி கண்ட நிலையில் ... முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. (ஐ-எ)

# பிரபாவை நாடு கடத்தும் உத்தரவு விரைவில் வரும்?

கொழும்பு, ஒக். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரனை நாடு கடத்தும்படி கோரி இந்திய அரசு சமர்ப்பித்துள்ள மனுவை ஸ்ரீலங்கா அரசின் சட்டமா அதிபர் திணைக்களம் தீவிரமாக பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும்—

இது தொடர்பான நாடு கடத்தல் உத்தரவை வெளியிடும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாகவும்—

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் கூட்ட வேளையின் போது —

திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி மீண்டும் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்தார் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பனை அபிவிருத்தி சபை நிதியில் பெரும் வெட்டு!

## வேலைத் திட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 12

இம் முறை பனை அபிவிருத்திச் சபைக்குத் தேவையான அளவு பணம் ஒதுக்கப்படவில்லை. அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்திலும் 20சத வீதம் வெட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முறை வேலைத் திட்டங்களுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா தேவை என பனை அபிவிருத்தி சபை அறிவித்திருந்த. ஆனால் ஒரு கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது.

பின்னர் அதிலும் 20வீதம் வெட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெட்டிய தொகை போக எஞ்சிய நிதி இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை. இதனால் சபையின் வேலைத் திட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பனை விதை நடுகை, கல்பிட்டி தும்புத் தொழிற்சாலைக் கட்டட வேலைகள், பனம் உணவு உற்பத்தி — பதனிடுதல், கைதடி ஆராய்ச்சி நிலைய நிர்மாண வேலைகள் உட்பட பல வேலைத்திட்டங்களை செயற்படுத்த பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டிருந்தது. போதிய நிதி அளிக்கப்படாமையால் இந்த வேலைத் திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. [எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோயிலக்கண்டி நாவற்குழியில் 10 ஏக்கர் தென்னந் தோட்டக்காணியும், வயல் காணியும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. துண்டு துண்டாகப் பிரித்தும்கொடுக்கப்படும். தொடர்பு: பா. கணேசானந்தன், "விவாகப் பதிவாளர் இல்லம்", 17/4, றெயில்வே வியூ (சோாசுந்தரம் ஒழுங்கை), சுண்டிக்குளி, கச்சேரிடி. (38958)

## மணப்பெண் தேவை

யாழ் இந்து, சாவகச்சேரியைச் சேர்ந்த, ஐரோப்பிய நாட்டில் எட்டு வருடங்களாக தொழில் புரியும் படித்த, ஒழுக்கமுள்ள, 28 வயது, மூலம் 2ஆம்பாதம், குற்ற மற்ற மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு: நா. சிறீரங்கநாதன், மிருகவைத்திய உத்தியோகத்தர், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம்சந்தி, சாவகச்சேரி (38946)

## வாடகைக்கு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு தனியாகவோ / பகுதியாகவோ வாடகைக்கு தேவை. வாடகை முற்பணம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். 14 - 10 - 95ந் திகதி நேரில் தொடர்புகொள்ளவும். இல: 63A, யாழ் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (38944)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கிங்ஸர் ஒழுங்கை மெதடிஸ்த மிஷன் பாடசாலை மாணவியால் கண்டெடுக்கப்பட்ட தங்கச்சங்கிலி ஒன்று பாடசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் அதிபருடன் தொடர்புகொள்ளவும். [38949]


**HARY'S INSTITUTE**

KONDAVIL EAST, KONDAVIL

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

Lectured By:
**Mr. M. A. HARI**
(B. A. Dip - in - Eng)

புதிய பிரிவு ஆரம்பம்
15 — 10 — 1995
ஞாயிறு மாலை 4 மணி
SAT SUN) 4 p.m - 5 p.m.

- DIRECTOR.

[38952]



**O/L**
**துரித மீட்டல் வகுப்புக்கள்**

விஞ்ஞானம்
இரா. செல்லவடிவேல்
கணிதம்
இரா. அருட்செல்வம்

ஆரம்பம்:
14 — 10 — 1995
4-00 மணி

✱ வாரத்தில் 6மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும்.

**புதிய இக்ஸ் அக்கடமி**
மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம்.
(38956)


**தென் இந்தியத் திருச்சபை**
யாழ். பேராயம்
## தொழிற் பயிற்சி நிலையம்
நகர்ப்பணி, யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

எமது தொழிற் பயிற்சி நிலையத்தின்
கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்
ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி 1995 ஆம் ஆண்டு
வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு
இலக்கம் 41, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ் நகரில்
திரு. என். எஸ். பி. தம்பு அவர்கள்
[செயற்திட்டப் பொறுப்பாளர்]
தலைமையில் நடைபெறும்
பேரருட்திரு D. J. அம்பலவாணர் அவர்கள்
சான்றிதழ்கள் வழங்குவார்
வைத்தியகலாநிதி திருமதி C. அம்பலவாணர் அவர்கள்
கண்காட்சியைத் திறந்து வைப்பார்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்

தொழிற் பயிற்சி நிலையம்,
யாழ்ப்பாணம். 05 - 10 - 1995 (8660)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**தாமோதரம்பிள்ளை அகிலேஸ்வரன்**

எமது பாடசாலையில் நீண்டகாலமாக அலுவலக உத்தியோகத்தராகக் கடமை புரிந்து, திடீர் மரணமுற்ற அன்னாருக்கு எமது பாடசாலை சமூகத்தினர் ஆழ்ந்த அனுதாபங்களையும், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப பிரார்த்தனைகளையும் சமர்ப்பிக்கின்றனர்.

கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களை வழங்கிக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஆசிரியரல்லாத அலுவலர்கள்,
மாணவர்கள்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம். [சி/2450]

## 8 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்: 05 — 12 — 1970



அரக்கன் அழிப்பு: 12 — 10 — 1987

**செல்வன் இ. இராஜராஜன்**
(ராஜ்)
(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்)

அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த எங்கள் ஆருயிச் செல்வமே ராஜ்! உங்களை மறக்க முடியாமல் தவிக்கும் தாய், தகப்பன் ஆண்டுதான் எட்டு ஆனாலும் எம் மகனை மறக்க முடியுமா? எங்கள் ஆவி பிரியும்வரை மகனேசொல்லொணா துயரில் துடிக்கும் எமக்குஆறுதல் சொல்ல யாரும் இல்லை மகனே. பரிகாசம் செய்ய பலர் உண்டு மகனே. உமது உடன் பிறவாச் சகோதரியையும் உம்மிடம் அழைத்து சென்று விட்டீரே மகனே. நீங்கள் இருவரும் எங்கள்மேல் பாசம் நிறைந்தவர்கள் எங்களிடமே விரைந்து வாருங்கள்.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி!!

உங்கள் பிரிவால் துயரப்படும்;
அம்மா, அப்பா, அண்ணா.

M. இராஜநாயகம்,
"இராஜராஜன். இல்லம்"
கோண்டாவில் [illegible]
கோண்டாவில். (38920)

# ஆயுத வர்த்தகருக்கே யுத்தத்தால் நன்மை

## முற்போக்கு முன்னணி கருத்து

வடக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையை தாம் எதிர்ப்பதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரிய புலேகொட கூறியுள்ளார்.

இராணுவ நடவடிக்கை மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றும் — யுத்தத்தால் ஆயுத வர்த்தகர்கள் மட்டுமே நன்மையடைவர் என்றும் — அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காவின் அரச மதமாக பௌத்தம் இருப்பதை தமது கட்சி எதிர்ப்பதாகவும் அவர் கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். [இ-3]

# 1,000 வீட்டு திட்டத்துக்கு யுனிசெப், கெயர் உதவி

முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத மக்களுக்காக அமைக்கப்பட்டு வரும் ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் உள்ள 200 குடும்பங்களுக்கான படுக்கைவிரிப்புகள், பாவனைப் பொருள்களை இயற்றாலைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வீட்டுத் திட்ட காரியாலயத்தில் வைத்து அகில உலக கெயர் நிறுவனப் பிரதிநிதி அருள் ஞானம் வழங்கினார்.

இத்திட்டச் செயற்பாட்டில் இதுவரை 300க்கு மேற்பட்ட வீடுகளும், 11 குழாய் கிணறுகளும் ஒரு திறந்த கிணறும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளதோடு 3 குளங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இத்திட்டத்திற்கு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மலசலகூடம் அமைப்பதற்கான ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இயற்றாலை அ. த. க. பாடசாலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் — மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தில் "ஆசெம்ளி ஒவ்கோட்" ஸ்தாபனமும் — இரு கொட்டகைகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளன.

அத்துடன் அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அகதிகளுக்கான விசேட ஆணையாளரின் பிரதிநிதியும் யுனிசெப் ஸ்தாபன பிரதிநிதியும் இத்திட்டத்தை பார்வையிட்டனர்.

இவ் வீட்டுத் திட்ட மக்களுக்கான விளக்குகளை யுனிசெப் பிரதிநிதி இயற்றாலை வீட்டுத் திட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயத்தில் ஒப்படைத்தார். (இ)

## வெளிவாரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். பல்கலைக் கழக வருடாந்த வெளிவாரிப் பரீட்சைக்கு [1994] விண்ணப்பித்தவர்களில் முதற்கலை முதல் வர்த்தகப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சை அலகின் அலுவலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம்— எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 03 — 02 — 1955



ஆண்டவன் அடியில்: 04 — 10 — 1993

**அமரர் நடராசா ஸ்ரீதரன்**
[யாழ் ப. நோ. கூ. சங்கம்]

திதி: 25 — 09 — 1995

விழிமூடிக் கண்துயிலும் வேளையிலும்
விலகாத துயரங்கள் சூழ்ந்ததுவே
நடமாடும் நின் வீட்டில் படமாகினீர்
நாம் நினையாத போதினிலே எமைப் பிரிந்தீர்
ஈராண்டு வந்ததய்யா நீர் இறையடி சேர்ந்து
இன்றும் நாம் நம்பவில்லை நீர் எமைப்பிரிந்தீர் – என்று

உங்கள் ஆத்மா இறையடி சேரப்
பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, உறவினர்கள்.

12/5, வினாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (38959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மத்தியஸ்தமா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும்—

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்—

மத்தியஸ்தராகப் பணிபுரிவதற்கு பிரித்தானிய அரசு தயாராக உள்ளதாம்.

கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகாரத் துணை அமைச்சர் ஜெரமி ஹன்ட்லி இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு தானும் தயார் என்று அமெரிக்காவும் முன்னர் அறிவித்திருந்தது.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தை போரிடும் இருசாராரும் ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தால் அந்தப் பணியைச் செய்வதற்கு தயார் என்றவாறே அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா விவகாரங்களில் பிரிட்டனை விட அமெரிக்கா அதிக அக்கறை காட்டுவது வெட்ட வெளிச்சமானது. ஸ்ரீலங்காவின் அரசியல் விடயங்களில் மட்டுமன்றி பொருண்மிய, சமூகத்துறைகளுக்குள்ளும் உட்புகுந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருவதும் அமெரிக்காவே.

பிரிட்டனை விட ஸ்ரீலங்கா மீது மிக அதிகமான செல்வாக்குச் செலுத்துவதும் அமெரிக்காவே.

இதில் விருப்பம் இருந்தால், தமிழ் மக்களுக்கு எதிராகப் போரை நடத்தும் ஸ்ரீலங்கா அரசாங்கமே அமெரிக்காவின் உதவியைக் கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் சந்திரிகா அரசு அது குறித்து எவ்வித கவனமோ, அக்கறையோ காட்டவில்லை.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் அமைச்சரின் மத்தியஸ்தப் பணி உதவி குறித்து சந்திரிகா அரசு நாட்டம் கொள்ளும் என்று எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாது.

பிரச்சினையின் தன்மையை அதன் தாக்கங்களை, சம்பந்தப்பட்ட மக்களின் அபிலாசைகளை சரிவரப் புரிந்து கொள்ளாமல், மூன்றாம் தரப்பு ஒன்று தனது அரசியல், வர்த்தக லாபங்களுக்கு முன்னுரிமை கொடுத்தே விவகாரத்தை அணுகும் என்பதனாலேயே உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு மத்தியஸ்தம் விரும்பப்படுவதில்லை.

ஆனால்—

மத்தியஸ்தத்துக்கு வரும் வெளிநாடு, தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து தமிழர்களின் உரிமைகளை வழங்குமாறு வற்புறுத்தலாம் என்ற அச்சத்தினாலேயே சந்திரிகா அரசு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை.

பிரிட்டனைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சனைக்கு வித்திட்டதே அது தான். அதனைத் தீர்ப்பதற்குப் பங்காற்ற வேண்டியது அதன் மானசீகக் கடமையாகும்.

ஆனால் தமிழ்ப் பிரதேசத்துக்கு வந்து அரசபடைகளால் மக்கள் கொல்லப்படுவதை நேரில் காண்பதற்குப் பின்னடிக்கும் ஜெரமி ஹன்ட்லி போன்ற பிரிட்டிஷ்காரரின் மத்தியஸ்தத்தில் தமிழர்களும் நம்பிக்கைவைக்க முடியாது!

# செய்தித் தணிக்கை விடயத்தில் சந்திரிகா - சேனநாயக்கா இழுபறி!

கொழும்பு, ஒக். 12

செய்தித்தணிக்கை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் தொடர்பு சாதன அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்று அறிய வருகிறது.

அமைச்சர் சேனநாயக்காவின் அறிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளதால் இந்தக் கருத்து வேறுபாடுகள் வெளிவந்துள்ளன.

தணிக்கை விதிகளை அமுலாக்கும் போது தளர்ச்சியாக இருக்கும்படி பிரதம தணிக்கை அதிகாரிக்குப் பணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சேனநாயக்கா கூறியதை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

அமைச்சர் சேனநாயக்கா தணிக்கை பற்றி ஜனாதிபதியுடன் விவாதித்தார் என்பதையும் அது மறுத்துள்ளது.

"ஒரு கலந்துரையாடலை அடுத்து, இராணுவச் செய்திகளைத் தணிக்கை செய்வதில் தாராளமான கொள்கையை அனுசரிக்கும்படியும் தணிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்படும் செய்திகளைக் கையாளுவதில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் ஜனாதிபதியால் அதிகாரம் அளிக்கப்பட்ட தணிக்கை அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டது" — என்று ஒக்ரோபர் 6 ஆம் திகதிய பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் —

அத்தகைய எந்தக் கலந்துரையாடலும் நடைபெறவில்லை எனவும் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய எந்தப் பணிப்புரையும் வழங்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி தெளிவாக்க விரும்புகிறார். தற்போது தணிக்கை அமுலாகும் முறை குறித்து தாம் திருப்தி அடைவதாக ஜனாதிபதி தெரிவிக்கிறார்".

— இவ்வாறு ஜனாதிபதி செயலகம் கூறுகின்றது. (ஒ-க)

# முழு அளவில் யுத்தத்தை தொடுக்க போர்த் திறன் மிகுந்த திட்டம் தயார்!

## தளபதி ஜெரி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 12

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு அளவிலான போரைத் தொடுப்பதற்கான போர்த்திறன் வாய்ந்த சாத்தியமாக்கத்தக்க திட்டம் ஒன்று தயாராக உள்ளது.

— இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இராணுவத்தின் 46 ஆவது ஆண்டு விழாவினை ஒட்டி வெளியிட்ட தமது செய்தியிலேயே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தனித்துறையில் சிறப்பு வாய்ந்த இயந்திர சாதனங்கள் உட்பட மிகப்பெரிய அளவிலான இராணுவத் தளபாடங்களின் தொகுதி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் இராணுவத்தளபதி தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் விடயத்தில் பரிவுடன் செயற்படுமாறும் அவர் இராணுவத்தினரைக் கேட்டுள்ளர்

(ஒ-ஐ)

# இலங்கை சரித்திரத்தில் எவருக்கும் இல்லாத பாதுகாப்பு சந்திரிகாவுக்கு

கொழும்பு, ஒக். 12

இலங்கையின் சரித்திரத்திலேயே எவருக்கும் வழங்கப்படாத பாதுகாப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தற்பொழுது வழங்கப்படுகிறது என்றும்—

கடந்த செப்டெம்பர் மாதம் முதல் ஜனாதிபதி சந்திரிகாவுக்கான பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

விமானமூலம் சந்திரிகாவை தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக வந்த தகவலை அடுத்தே அவரின் பாதுகாப்பு என்றும் இல்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடம் இருந்து மட்டுமல்ல, அவரது இனத்தில் இருந்தும் சந்திரிகாவுக்கு அச்சுறுத்தல் உள்ளது

வீட்டுக்குள் இருட்டினை வைத்துக்கொண்டு தனது வாசஸ்தலத்தைச் சுற்றி 750 படையினரை பாதுகாப்புக்கு வைத்திருப்பதால் என்ன பயன்? — இவ்வாறு வெரித்தாஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

(ஒ-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக் 12

தற்கால நெருக்கடி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று பழைய கொத்தணிப் பாடசாலை அடிப்படையில் நல்லூர் கல்விக் கோட்டத்தில் இன்று நடைபெறஇருக்கிறது,

கனகரத்தினம் ம.ம.வி. கொத்தணிப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர்க்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 12.30க்கு கனகரத்தினம் மத்திய வித்தியாலயத்தில் நடைபெறும்

(ஒ-3)

## கொழும்பில் தரித்து நிற்கும்

# 'மாஹோ'வில் பொருள்கள் ஏற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 12

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'மாஹோ'' கப்பலில் பொருள்களை ஏற்றும் பணி ஆரம்பமாகியுள்ளதாக யாழ். செயலகத்துக்கு நேற்று தகவல் அனுப்பப்பட்டிருந்தது.

இக்கப்பலில் மண்ணெண்ணெய், உரம் ஆகியன எடுத்து வரப்படவிருப்பதாக கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபர் நேற்று செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

கப்பல் எப்போது புறப்படும், பருத்தித்துறைக்கு வருமா அல்லது காங்கேசன் துறைக்குச் செல்லுமா என்பது குறித்த விவரம் எதுவும் அத்தகவலில் தெரிவிக்கப்படவில்லை. (ஒ-3)

# ஈவினையில் மீட்ட சடலம் அரச செலவில் அடக்கம்

## உறவினருக்கு ஏற்பட்ட அவலநிலை

யாழ்ப்பாணம் ஒக் 12

ஈவினைப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது

ஈவினையைச் சேர்ந்த சி. இராசம்மா [வயது 60] என்பவரே அங்கு மரணமான நிலையில் மீட்கப்பட்டவர் ஆவார்.

உறவினர்கள் இடம்பெயர்ந்திருப்பதால் இறுதிக்கிரியைகள் செய்ய முடியாத நிலையில், அரச செலவில் சடலத்தை அடக்கம் செய்யும்படி கேட்கப்பட்டதை அடுத்து—

ஆஸ்பத்திரி நிர்வாகம் அரச செலவில் அடக்கத்தைச் செய்துமுடித்தது. [ஒ-15]

# ஒரு வார உலர் உணவு

தென்மராட்சி, ஒக். 12

இடிமுழக்க இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதி நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு ஒருவார கால உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தாம் தங்கியுள்ள பகுதி கிராம அலுவலரிடம் தமது விபரங்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் ... பின்னை அறிவித்துள்ளார்.

### யாழ் நகரப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகள் ஏவுகணைத் தாக்குதல் மூலம் இரு அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்தி இருந்தனர் என்று படையினர் கருதுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

### படையின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிராக சர்வதேச சமூகம் தனது வெறுப்பையும் எதிர்ப்பையும் ஸ்ரீலங்கா அரசுக்கு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

போர்ச் செய்திகள் மீதான தணிக்கையுடன் தீவிரமாகியுள்ள யுத்தத்தினால் இறக்கும் பொதுமக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதற்காக ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை இயக்கங்கள், இதற்காக ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக சிற்சில பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ளும்படியும் தத்தமது நாடுகளின் அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன.

வடபகுதி மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா, ஜேர்மன் போன்ற வல்லாதிக்க நாடுகள் பல இராஜதந்திர மட்டத்தில் வளைந்துகொடுக்கும் கொள்கையைத் தற்போது பின்பற்றினாலும்—

அந்த நாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புக்களும் முற்போக்கு சக்திகளும் யுத்தத்துக்கு எதிரான விடயத்தில் தீவிர போக்கையும் செயற்பாட்டையும் அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, போர்ச் செய்திகள் மீதான தணிக்கையும் இந்த அமைப்புகள் ஸ்ரீலங்கா அரசு மீது குற்றம் சுமத்துவதற்கு வாய்ப்பளிப்பதாக அமைந்துவிட்டது.

பெரும் மனிதப் படுகொலைகளுக்கு வழிவகுக்கும் யுத்தத்தை செய்தி தணிக்கையின் கீழ், ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் அதே வேளையில் மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கும் அந்தத் தணிக்கையை அரசு பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் நிறைய உள்ளன.

யுத்தத்தை நிறுத்தச் செய்யும் அளவுக்கு சர்வதேச எதிர்ப்பு வலுக்கக்கூடும் என செய்திகள் தெரிவிக்கின்றன

கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் படை அதிகாரிகள் என மேற்படி மனித உரிமை அமைப்புக்களாலும் முற்போக்குச் சக்திகளாலும் நீண்டகாலமாக குற்றம் சாட்டப்பட்டோருக்கு எதிராக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அந்த அதிகாரிகளைத் தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதித்ததும் —

அவர்கள் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என நொண்டிச் சாட்டுக்கூறி நடவடிக்கை எடுக்காமல் தவிர்ப்பதும் இந்த அமைப்புகளுக்கு எரிச்சலை யூட்டியுள்ளன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-10)

### படையினரின்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் படையினருக்கு எந்த விதப் பின்னடைவையும் ஏற்படுத்தி விடவில்லை என்றும்—

தொண்டமானாறு கடலேரி வரையிலான பகுதியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது படையினருக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளதாகவும் —

கடலேரியின் மேற்குப் பகுதியில் படையினர் நிலை கொண்டிருப்பதாகவும் —

ஒக்ரோபர் முதலாம் திகதி தற்போதைய ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலும் மற்றும் முல்லைத்தீவு பொலன்னறுவை ஆகிய இடங்களிலும் சுமார் 70 படையினர் கொல்லப்பட்டதாகவும்—

ஏறத்தாழ 130 படையினர் காயம் அடைந்ததாகவும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

### யாழ். அரச--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவசர கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ கப்பல்கள் மூலம் உடனடியாக உணவுப் பொருள்கள் அனுப்பவேண்டும்

★ கிளிநொச்சியில் அரிசியைக் கொள்வனவு செய்து குடாநாட்டுக்குக் கொண்டு செல்வதற்கு வசதியாக ஆறு கோடி ரூபாவை வழங்கவேண்டும்.

★ யாழ். வங்கிகளில் ஏற்பட்டுள்ள பணத் தட்டுப்பாட்டை நீக்க உடன் 10 கோடி ரூபா பணம் அனுப்ப வேண்டும்.

[உ-3-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை அகிலேஸ்வரன்

(நியுலங்கா ஒலி அமைப்பாளரும், சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி அலுவலக உதவியாளரும்)

மல்லாகம் ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும், தற்போது செல்வராசா வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அகிலேஸ்வரன் காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான தாமோதரம் பிள்ளை (விதானையார்) தம்பதிகளின் அன்பு மகனும், அகிலேஸ்வரி, சிவசம்பு [உதவிக் கல்விப் பணிப்பாளர், ஒட்டிசுட்டான்] கமலாதேவி, விமலாதேவி (ஆசிரியை, விசாலாட்சி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசரத்தினம் (இளைப்பாறிய லிகிதர்), சதானந்தன் [நில அளவை அத்தியட்சகர், திருகோணமலை) சர்வானந்தா [பிரதம லிகிதர், வீதி அபிவிருத்தி அதிகார சபை], சந்திரஞானம் [உதவி திட்டப்பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, முல்லைத்தீவு] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 11 - 10 - 95 புதன்கிழமை கோண்டாவிலில் நடைபெற்றன.

தகவல்:
தா. சிவசம்பு
[சகோதரன்]

செல்வராசா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(38957)

## பெனிஸ்ரர் ரஞ்சன் ஐறின் பெனிற்றா (சாந்தி)

50/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பெனிஸ்ரர் ரஞ்சன் ஐறின் பெனிற்றா (சாந்தி) பிரான்ஸில் 06 - 10 - 1995 இல் அகால மரணமானார்.

இவர் ரஞ்சனின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும், அந்தோனிப்பிள்ளை (கந்தோலிக்க ஆச்சகம்) - மேரி ஜோசப்பின் (நேசம்) ஆகியோரின் அன்பு மகளும், தேவராஜ், ரவிராஜ், ரஞ்சினி, டன்ஸ்ரன், ரேமண்ட் (லக்கி), அலன், சுகந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. திருமதி போல்பிள்ளையின் அன்பு மருமகளும், உல்றிக்கே (ஜேர்மனி), சீலி [லண்டன்], இந்திரன் (சுவிஸ்], தர்ஷினி (கனடா], பிரியாந்தி [சுவிஸ்], காலஞ்சென்ற ஜான்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவரின் ஆத்மசாந்திக்காக இன்று (12-10-1995] முற்பகல் 10-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
இ. அந்தோனிப்பிள்ளை
(தந்தை]

(38967]

## செல்லப்பா சிவலோகநாதன்

அரியாலையைச் சேர்ந்த செல்லப்பா சிவலோகநாதன் [ஓய்வு பெற்ற நில அளவை உப அத்தியட்சகர்] 10-10-95 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், பாக்கியரத்தினத்தின் [ஓய்வுபெற்ற ஆசிரியை] அன்புக் கணவரும், சிவபாலன், சிவயோகம், சிவரதனா, சிவசொரூபி, சிவானந்தன், கணேஸ்வரன், பரணீஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், யோகேஸ்வரி, கனகரத்தினம், சுகுமார், வாசுதேவ, நிருத்திகா, ஆகியோரின் மாமனாரும், இராசம்மா, நடராசா, பரமநாதன், நாகலோசனி, தங்கரத்தினம், மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தனபாலரத்தினம், கணேசரத்தினம், பத்மாவதி, செல்வரத்திரா, சிவநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. நடராசா
[சகோதரன்]

477, கண்டி வீதி,
அரியாலை.

[38962]

## கந்தையா நடராசா

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கந்தையா நடராசா (11 - 10 - 95) நேற்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, அன்னலக்சுமி, சுந்தரி, கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசா, பேரின்பநாதன் (அருள்) இராஜலிங்கம் ஆகியோரின் மாமனாரும், தவறஞ்சன், சிறீநந்தினி, சிறீமலர், நிகன், சிவதர்சினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்னலக்சுமி
(மகள்)

கேரதீவு வீதி,
நாவற்குழி.

(38963)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### மீன் பிடித்தால் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சடுபடுவதாகவும்—

அவர்கள் கரையிலிருந்து பத்து மைல் தூரம் வரை சென்று மீன் பிடிக்கிறார்கள்—

அதனால் போராளிகளும் மீனவர்கள் போன்றே நடமாடுவதால் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுவதாகவும்—

மீனவர்கள் கடலில் விரிக்கும் வலைகளால் கடற்படைக் கலங்களின் பாதுகாப்பான பயணத்துக்கு இடையூறாக அமைவதாகவும்— பிராந்திய கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இனிமேலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று அவர் எச்சரித்துள்ளார். [அ]

### படையினருக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துறை வீதி வழியாக மேலதிக வீரர்களை புலிகள் நகர்த்தி இருந்தனர்.

படையினர் கனரக பீரங்கிகள், மோட்டார்கள் செல் லோன்ச்சர் ஆகிய, சீன தயாரிப்பு நடுத்தர டாங்கிகள், 'எப்ட 7' ரக ஜெட் மற்றும் புக்காரா விமானங்களின் உதவியுடனேயே முன்னேற முயன்றது.

படையினருக்கு ஆதரவாக பலாலி விமானத்தளம் பகுதியில் இருந்தும் புலிகளின் நிலைகள் மீது பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஞாயிறு நண்பகலுக்கு பின்னர் படையினர் பலாலி பாதுகாப்பு எல்லையில் இருந்து கிழக்காகவும் தென்கிழக்காகவும் மூன்று கிலோ மீற்றர் தூரம் முன்னேறி இருந்தனர்.

எனினும் ஞாயிறு இரவு படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் இம் முன்னேற்றம் தடைப்பட்டது. பெரும் எண்ணிக்கையான படையினர் காயம் அடைந்தமையால் அவர்களுக்குப் பதிலாக வேறு படையினரை அங்கு நகர்த்த வேண்டி இருந்தது. களத்தில் இருந்த படைத் தளபதிகளுக்கு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தி இருந்தது.

அத்துடன் தொடர்ந்து முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னைப் பற்றிய 25 சதுர கிலோ மீற்றர் பகுதிக்குள் தேடுதல் நடத்த வேண்டிய தேவையும் படையினருக்கு ஏற்பட்டிருந்தது.

இப்படி பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

செவ்வாய் அதிகாலை புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி பகுதிகளில் இருந்து புலிகளின் ஓர் அணியும் புத்தூர் மேற்கில் இருந்து புலிகளின் மற்றோர் அணியும் படையினரின் காவலரண்களை ஊடறுத்துத் தாக்க முயற்சித்ததாகவும்—

அதற்கு முதல் நாளான திங்கட்கிழமை முழுதும் படையினர் தமது பாதுகாப்பை பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர் என்றும்—

இதனாலேயே செவ்வாய் அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலை அவர்களால் முறியடிக்க முடிந்தது என்றும் பாதுகாப்புச் செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார். [இ]

### பண்டா—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெண்டர் ஒருவர் விசாரணை மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 20 பொலிஸார் பொலிஸ் தலைமையகத்துக்கு உடன் மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்த பூரண அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார்.

மேற்படி சம்பவம் குறித்த மேலதிக செய்திகள் எதுவும் வெளியாகவில்லை. [இ-3]

### சந்திரிகாவின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணத்துடனும் ஜனாதிபதியினால் விடுக்கப்படும் அறிக்கை" என அதில் தலைப்பு இடப்பட்டிருந்தது.

தான் தேர்தலில் வெற்றியீட்டியது முதல் தற்போதைய யுத்தம் வரையான தனது கருத்துக்களை இந்த நீண்ட அறிக்கையில் சந்திரிகா விவரித்திருந்தார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்டெம்பர் 15 வரை யாழ் மாவட்டத்துக்கு தமது அரசால் அனுப்பிவைக்கப்பட்ட அரிசி, சீனி, மா, பால்மா போன்ற உணவுப் பொருள்கள், சவர்க்காரம், மண்ணெண்ணெய், மருந்துவகை ஆகியவற்றின் அளவையும் பெறுமதியையும் ஜனாதிபதி சந்திரிகா இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அறிக்கையுடன், அரசு முன்வைத்துள்ள அரசியல் யோசனைகளின் பிரதி உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அத்தகைய பிரதி ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை "உதயன்" அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை.

அறிக்கை புலிகளுக்கு எதிரான கடும் வாசகங்களைக் கொண்டிருந்தது.

ஒரு பெண் என்ற முறையில் — குறிப்பாக இரண்டு குழந்தைகளின் தாய் என்ற முறையில் — வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தாய்மார்களின் கண்ணீர் வேதனையைத் தாம் நன்றாக உணர்ந்து கொண்டிருப்பதை விசேடமாகக் கூற விரும்புவதாக அந்த அறிக்கையில் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

"எமது பிள்ளைகள் சமாதான நிலையில் கௌரவமாக வாழ வழி வகுப்போம். இந்த உயரிய இலட்சியத்தை அடைவதற்கு நாட்டைப் பிக்கா மல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வோம் அத்தகைய ஒரு நிலைமையில் நாம் எமது சம உரிமைகளைக் கொண்டு மொழிகளின், மதங்களின், கலாசாரங்களின் தனித்துவங்களைப் பாதுகாப்போம். பெருமைமிக்க மக்களாக சுபிட்சத்தையும் சமாதானத்தையும் நோக்கி வீறுநடை போடுவோம்" — என அறிக்கையின் இறுதியில் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை தீவிரமாக்கும் தமது திட்டம் குறித்து சந்திரிகா இந்த அறிக்கையில் எதனையும் தெரிவிக்கவில்லை. [உ-15]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கரத்தினம் சோமசுந்தரம்

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் சோமசுந்தரம் நேற்றுக் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஓவசியர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், பாலாம்பிகை [I S A], அருணகிரிநாதன் [சக்தி பாமசி சுன்னாகம்], முருகானந்தம் [Canada] ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. மு சுப்பிரமணியம், திருமதி அருணகிரிநாதன், திருமதி முருகானந்தம் ஆகியோரின் மாமியாரும், இந்திரா, கிருஷ்ணான், நிருபராஜ், ரகுராஜ், ரஜீவ், சித்ரஜா ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (11 - 10 - 95) நேற்று மாலை சண்டிக்குளி இல்லத்திலிருந்து தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பா. சுப்பிரமணியம்
(மகள்)
அரியம்
(மகன்)

74, குருசோல் வீதி,
சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(38968)

## திருமதி மகேஸ்வரி நவரத்தினம்

புன்னாலைக் கட்டுவன் தெற்கு திருமதி மகேஸ்வரி நவரத்தினம் நேற்று இயற்கையெய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைதடி விதானை ச. நவரத்தினத்தின் அன்பு மனைவியும், ஈவினை அ. த. க. பாடசாலை அதிபர் ஜெயகுமாரன், திருமதி ஜெயலக்சுமி கவீந்திரன் (லண்டன்), சரோஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பரமேஸ்வரி சபாபதிப்பிள்ளையின் (கைதடி] சிறியதாயாருமாவார்.

இவரது இறுதிக்கிரியை ஊரெழு - ஆலடி வீதியில் உள்ள இல்லத்தில் இன்று மு. ப 10 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயகுமாரன்
[மகன்]

(38964)

## இராமசேது அசோக்குமார்

(கண்ணன் - இலங்கை வங்கி)

திருநெல்வேலி - பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த இராமசேது அசோக்குமார் [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்] நேற்றுக் காலமானார்.

இவர் இராமசேது - நாகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், கலைச்செல்வியின் அன்புக் கணவரும், நிரோஜன், பிரஷாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபாபதி-அன்னலட்சுமி தம்பதியினரின் மருமகனும், சடாச்சரலிங்கம், ரதிவதனா [பிரான்ஸ்], உதயகுமார், வசந்தகுமார், ஜெயரதி, றஜினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாலசிங்கம், சகுந்தலாதேவி, கலைச்செல்வன் [ஹொலண்ட்], கலைக்குமார் (ஹொலண்ட்), செல்வநாயகம், கலையரசி, கனகமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-10-95] வியாழன் பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராமசேது
[தந்தை)

(38969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org